பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 15] சென்னை: ஐப்பசி 16உ (2—11—67) வியாழன் வெளியூர்: ஐப்பசி 17உ (3—11—67) வெள்ளி [இதழ்: 116

## நவம்பர் 7: விடுமுறை நாள்

அரசு அறிவிப்பு

சென்னை, நவ. 1—

தென் சென்னைத் தொகுதி நாடாளுமன்ற இடைத் தேர்தல் வாக்குப் பதிவு நடைபெறும் நவ. 7-ம் நாள் சென்னை நகரில் பொது விடுமுறை என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.

# 'மாஜினி--கரிபால்டி பிறந்த மண்ணுக்குச் செல்கிறேன்'

## 'தென் சென்னை வெற்றிச் செய்திக்காகக் காத்திருப்பேன்'

## 'அவனியோருக்குப் பெருமையுடன் அறிவிக்கும் வாய்ப்பினை நல்குவீர்'

## வெளிநாடு புறப்பட்ட கே. ஏ. மதியழகன் விடைபெறுமுன் தமிழக மக்களுக்கு விடுத்த வேண்டுகோள்

சென்னை, நவ. 2—

"மாஜினியும், கரிபால்டியும் பிறந்த மண்ணுக்கு நான் புறப்படுகின்றேன்! அண்ணாவின் தூதுவனாக--இந்திய மக்களின் பிரதிநிதியாக நான் மேற்கொள்ளும் இந்த ஐரோப்பியப் பயணம் வெற்றிபெறுவது உறுதி.

"கடமை என்னை நெடுந்தொலைவிற்கு அழைத்துச் செல்கிறது! ஆனால் எனது நினைவு—அலைகடல், மலைகள், மாநதிகள், மண்டலங்கள், மாநகர்களைக் கடந்து தென் சென்னையில் சஞ்சரித்துக்கொண்டே இருக்கும்''

என்று உணவமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன், தமது வெளிநாட்டுப் பயணத்துக்குமுன் தமிழகத்துக்குத் தந்த செய்தியில் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது :—

''என்னரும் தமிழ்நாட்டு மக்களே! எழில் நாடாம்—இத்தாலிய நாட்டின் தலைநகராம் ரோமில் துவங்கும் உலக உணவு மாநாட்டில், இந்தியப் பேரரசின் தூதுக் குழுவின் மாற்றுத் தலைவராகப் பணியாற்றும் வாய்ப்பினைப் பெற்றுள்ளேன்.

இந்தச் சிறப்பு, தமிழக அரசுக்கும்—நமது அண்ணனும் வழிகாட்டியுமான பேரறிஞர் அண்ணாவிற்கும் டில்லிப் பேரரசு சூட்டும் புகழ்மாலையாகும்!

அண்ணாவிடம் 20 ஆண்டுக் காலம் பெற்ற பயிற்சியும் பக்குவமும், நான் மேற்கொண்ட பணியினைச் சிறப்பிக்கும் என்ற அசையாத நம்பிக்கையில்—உங்கள் பேரன்பும் நல்வாழ்த்தும் எனது முயற்சிகளுக்கு வெற்றிக் கேடயத்தை நல்கும என்ற நம்பிக்கையில்—சிரம் தாழ்த்தி கரம் கூப்பி அறிஞர் அண்ணா அவர்களிடமும், தமிழ் மக்களாகிய உங்களிடமும் விடை பெறுகிறேன்.

நவம்பர் ஏழாம் நாள், அண்ணாவின் ஆட்சியின் மீது தென் சென்னை வாக்காளர்களுக்கு உள்ள நம்பிக்கையைப் பிரகடனப்படுத்தும் நாள்!

தம்பி மாறனை, நாடாளுமன்ற உறுப்பினராக நீங்கள் ஊருக்கும் உலகுக்கும் அறிவிக்கும் நாளில், உங்களோடு நானும் 'கியூ' வரிசையில் நின்று வாக்களிக்க முடியவில்லையே என்ற வருத்தத்தோடு செல்கிறேன்.

சாரை சாரையாக மக்கள் வாக்குச் சாவடிகளுக்குச் செல்லும் காட்சி—தம்பி மாறனுக்குப் பல்லாயிரவர் இரவு பகல் பாராது உழைக்கும் தொண்டுள்ளம்—இப்படி எத்தனையோ எண்ண அலைகள் என் மனக்கண்ணில் நிழலாடுகின்றன!

தம்பி மாறனின் வெற்றிச் செய்தி ரோம் நகரில் வழிமேல் விழி வைத்துக் காத்திருக்கும் எனக்கு எட்டவேண்டும்; அதன் மூலம் அண்ணாவின் ஆட்சிக்குத் தமிழ் மக்களின் இதயத்திலே உள்ள இடத்தைப் பற்றி உலகில் எட்டுத் திக்கிலிருந்தும் வந்திருக்கும் 107 நாடுகளின் பிரதிநிதிகளிடம் நான் பெருமையுடன் எடுத்துச் சொல்லவேண்டும்.

இந்தப் பெருவாய்ப்பை நீங்களெல்லாம் அருளவேண்டும். இதுவே எனது விண்ணப்பம்—வேண்டுகோள்!

சென்று வருகிறேன்; 'வென்று வருக' என்று நல்வாழ்த்துக் கூறுங்கள்! எனது வெற்றி, அண்ணாவின் வெற்றி—தமிழ்ப் பெருமக்களின் வெற்றி!"

## உணவு உற்பத்தியைப் பெருக்கும் தமிழக அரசின் முயற்சி

### கானடா நாட்டு நிபுணர்கள் ஒத்துழைப்புக் கிடைக்கும்

சென்னை, அக். 31—

இந்தியாவிலுள்ள கானடா நாட்டின் தூதுவர் திரு. ஜேம்ஸ் ஜார்ஜ் தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் இல்லம் சென்று சந்தித்தார்; அண்ணா அவர்கள் மலர் மாலை யணிவித்து வரவேற்று அளவளாவினார்கள்.

தமிழ் நாட்டின் குந்தா நீர் விசைத் திட்டத்துக்குக் கானடா செய்துள்ள உதவி குறித்து அண்ணா அவர்கள் பாராட்டுத் தெரிவித்தார்கள்.

வேளாண்மைத்துறை மேம்பாடு குறித்தும் இருவரும் பேசிக்கொண்டிருந்தனர்.

தற்போது கானடாவிலிருந்து வந்துள்ள வேளாண்மை நிபுணர்கள் குழுவைக் கொண்டு தமிழகத்தில் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதற்கான முயற்சிக்கு உதவுவதாகக் கானடா தூதர் கூறினார்.

சந்திப்பு முடிந்து வெளியே வந்ததும் கானடா தூதுவர் கூறியதாவது :—

"தமிழகத்தின் பழக்க வழக்கங்கள்—பண்பாடுகள் எனக்கு மிகவும் பிடித்திருக்கின்றன.

"தமிழகத்தின் பல்வேறு இடங்களையும் நான் பார்வையிட்டேன். தமிழக முதலமைச்சரின் அறிவாற்றலையும் திறமையையும் ஆங்கிலப் புலமையையும் நான் கேள்விப்பட்டிருக்கிறேன்; அவரைச் சந்தித்த பின், அதை உறுதிப்படுத்திக் கொண்டேன்."

## கடத்தல் லாரி பிடிபட்டது!

செங்கோட்டை, அக். 31—

'சேனைக் கிழங்குகள்' என்று சொல்லி 150 மூட்டை யூரியா உரத்தைக் கடத்திச் செல்ல முயன்ற ஒரு லாரியை பறக்கும் படையினரும், காவல் துறையினரும் கடந்த அக். 26-ம் நாள் இலத்தூர் சாலையில் கைப்பற்றினர்.

இதன் தொடர்பாக அந்த லாரி ஓட்டி தங்கப்பன் என்பவரும் அவர் துணையாளர் பாப்பச்சன் என்பவரும் கைது செய்யப்பட்டனர்.

கைப்பற்றப்பட்ட உர மூட்டைகளின் மதிப்பு சுமார் ரூ. 7,000.

நாடாளுமன்ற

தென் சென்னைத் தொகுதி

இடைத் தேர்தல்



7--11--67

★

தி. மு. கழக வேட்பாளர்

முரசொலி

மாறன்


அவர்கள்

வெற்றி பெற

உதயசூரியன்

சின்னத்தில்

முத்திரையிடுவீர்!



# கே.ஏ.மதியழகன் வெளிநாடு பயணம்

## விமான நிலையத்தில் அண்ணா வழியனுப்பினர்

### கவர்னர்---அமைச்சர்கள்---கழகத் தோழர்கள் வாழ்த்தோடு விமானத்தில் புறப்பட்டார்


சென்னை, நவ. 2—

தமிழக உணவுத் துறையமைச்சரும், திராவிட முன்னேற்றக் கழகத் தலைமை நிலையச் செயலாளருமான திரு. கே.ஏ. மதியழகன் அவர்கள், இன்று முதன்முதலாக வெளிநாட்டுக்குப் பயணமானார்.

மீனம்பாக்கம் விமான நிலையத்தில் அவருக்குச் சிறப்பான வழியனுப்பு நடத்தப்பட்டது.

அறிஞர் அண்ணா உட்பட அமைச்சர்கள், மற்றும் கழக முன்னணித் தோழர்கள், நாடாளுமன்ற - சட்டமன்ற - மாநகராட்சிமன்ற உறுப்பினர்கள், கழகத் தோழர்கள் பலரும் வந்திருந்து மாலையணிவித்து வழியனுப்பிவைத்தனர்.

கவர்னர் உஜ்ஜல் சிங் தம்பதிகளும் விமான நிலையத்துக்கு வந்திருந்து வழியனுப்பினர்.



விமான நிலையத்துக்கு வந்திருந்து வழியனுப்பி வைத்தவர்கள்: அமைச்சர்கள் இரா. நெடுஞ்செழியன், மு. கருணாநிதி, ஏ. கோவிந்தசாமி, சத்தியவாணி முத்து, செ. மாதவன், சாதிக் பாட்சா, முத்துசாமி, அமைப்புச் செயலாளர் என்.வி. நடராசன் எம்.எல்.சி., வெளியீட்டுச் செயலாளர் சி.பி. சிற்றரசு எம்.எல்.சி, புரட்சி நடிகர் எம்.ஜி. இராமச்சந்திரன், மதுரை முத்து எம்.எல்.சி., அன்பில் தர்மலிங்கம், நீலநாராயணன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் எஸ்.எஸ். மாரிசாமி, சிட்டிபாபு, சி.டி. தண்டபாணி, நெல்லிக்குப்பம் கிருஷ்ணமூர்த்தி, கள்ளக்குறிச்சி தெய்வீகன், க. இராசாராம், சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.எம். இராசா, எஸ். இராமச்சந்திரன், திருப்பூர் துரைசாமி, எம். இராசாங்கம், மற்றும் தோழர்கள் முரசொலி மாறன், ஜி. பராங்குசம், க. அறிவழகன் எம்.எல்.சி., கோவை செழியன், டி.கே. கபாலி, டி.கே. பொன்னுவேலு, சிவகுமாரன், கோவை இராசமாணிக்கம், மேயர் இரா. சம்பந்தம், துணை மேயர் கிருஷ்ணமூர்த்தி, முன்னாள் மேயர் வி. முனுசாமி, வழக்கறிஞர்கள் வேலூர் ஜெயவேலு, தஞ்சை சுதாதரன், கே.ஏ. கிருஷ்ணசாமி, மற்றும் பலர்.

திரு. கே.ஏ. மதியழகன் அவர்கள் இன்று புதுடில்லிக்குச் சென்று அங்கிருந்து நாளை ரோமுக்குப் பயணமாகிறார்.

ரோமில் நடைபெறும் உலக உணவு மாநாட்டில் கலந்து கொண்டுவிட்டு, மற்றும் ஐரோப்பிய நாடுகளில் சுற்றுப்பயணம் செய்துவிட்டுத் திரும்புகிறார்.

## இலங்கை கவர்னர் - ஜெனரல் சென்னை வருகை

### அறிஞர் அண்ணா வரவேற்றார்

சென்னை, நவ. 1—

இலங்கை கவர்னர்-ஜெனரல் டபிள்யூ. கோபல்லவாவும் அவரது துணைவியாரும் தமது இந்தியச் சுற்றுப்பயணத்தின் கடைசி பகுதியாக விமான மூலம் இன்று இங்கு வந்து சேர்ந்தனர்.

விமான நிலையத்தில் தமிழக கவர்னர் உஜ்ஜல் சிங்கும், முதலமைச்சர் அண்ணா அவர்களும் மாலையிட்டு வரவேற்றனர்.

நம் நாடு
ஆசிரியர்: இரா. செழியன் எம். ஏ.

திருவள்ளுவராண்டு 1998 ஐப்பசி 16 (2—11—67) வியாழன்

# காமராசர்—'ஓர் ஊமைத் தலைவர்'

## கட்சி சரிந்தது அவரால்தான்!

### சாடுகிறார் வங்காளத்துக் காங்கிரசுத் தலைவர்!



"தனது கட்சிக்காரர்களிடம் இந்தியிலோ ஆங்கிலத்திலோ பேசும் திறமையற்ற 'ஊமைத் தலைவர்' காமராசரால் தான், கட்சி பெருமளவு சரிய நேரிட்டது" என, ஜபல்பூர் காங்கிரசு மாநாட்டில் பேசிய வங்காளத்துக் காங்கிரசுக்காரர் பிஜாய் சிங் நஹரார் குறிப்பிட்டுள்ளார்.

காமராசரின் தகுதியற்ற திறமையைச் சாடியவர்களில் இவரும் ஒருவர்; வங்காளத்துக்கெனத் தலைமைப்பீடம் அமைத்த தற்காலிகக் கமிட்டியின் ஓர் உறுப்பினர்; தொடர்ந்து இப்போது அப்பதவியையும் இராஜிநாமா செய்திருப்பவர்.

# 'அமைதி'க்குப் பரிசு இல்லை!

## சிறப்பிக்க ஆளில்லை!

இந்த ஆண்டும், 'அமைதி'த் துறைக்கான நோபல் பரிசு, எவருக்கும் இல்லை என அறிவிப்பு வெளியாகியுள்ளது!

சென்ற ஆண்டும் அமைதிப் பணிக்கான நோபல் பரிசுத் தகுதி, எவருக்கும் வழங்கப் படவில்லை!

நான்கு ஆடவர்களும் ஒரு பெண்ணும் இடம்பெறும் இந்தத் தேர்வுக் குழு, 'பரிசு ஏன் இல்லை' என்பதற்கான விளக்கத்தை, வழக்கம்போல் இப்போதும் தெரிவிக்கவில்லை!

# காலம் மாறிப் போச்சு!

சென்னை நகர போலீசு சட்டத்தின் 41-வது பிரிவுப்படி, காவல் துறையின் முன் அனுமதி பெறாமல் கூட்டங்கள், ஊர்வலங்கள் நடத்துவதற்குத் தடை விதிப்பது என்பது, காங்கிரசு ஆட்சிக் காலத்தில் நிகழ்ச்சியாக இருந்துவந்தது; மேற்படி தடைச் சட்டத்திற்கு, இடையறுது உயிரூட்டப்பட்டும் வந்திருக்கிறது.

இப்படித் தொடர்ந்தாற்போல், மேற்படி தடைச் சட்டத்தைச் செயல்படுத்தி வருவதை எதிர்த்து, உயர் நீதிமன்றத்தில் வழக்கும் தொடரப்பட்டிருக்கிறது.

இப்படி நகரப் போலீசு சட்டத்தின்கீழ், அடிப்படை உரிமைகளை அனுபவிக்க விடாமல் மக்களுக்குத் தொடர்ந்து தடை விதித்து வருவது, 'அரசியல் சட்டத்துக்கு முரணானது; சனநாயகக் கோட்பாட்டுக்கு விரோதமானது' என்றெல்லாம் அப்பொழுது குரல் எழுப்பப்பட்டது. அவ்வாறு எழுப்பப்பட்ட குரல்களுக்கெல்லாம், பொதுவாகக் காங்கிரசு ஆட்சியும் குறிப்பாக அப்பொழுது முதலமைச்சராக இருந்துவந்த பக்தவத்சலனார் அவர்களும் கூறியது என்ன?

எதிர்ப்புக் குரல்களை எள்ளிநகையாடினர் முன்னாள் முதலமைச்சர்;—'ஆட்சியை எதிர்த்துக் குழப்பம் செய்யவும், அமைதியைச் சீர்குலைக்கவும் தங்களுக்கு வாய்ப்பில்லாமல் ஆக்கப்பட்டு விட்டதற்காக எதிர்ப்புக் குரல் எழுப்புகின்றனர்' என இழித்துப் பழித்துப் பேசினர்.

இது மட்டுமா?—'சட்டம் - அமைதியைப் பாதுகாத்து வர வேண்டியது காவல் துறையின் கடமையாகும்; அத்துறையிலுள்ள அதிகாரிகளுக்குத்தான் தெரியும்—'சட்டத்தையும் ஒழுங்கையும் சீர்குலைக்கத் திட்டமிடப்படுகிறதா இல்லையா' என்கிற உண்மை நிலவரம்; எனவே, காவல் துறையின் அன்றாட நிர்வாகத்தில் அரசாங்கம் குறுக்கிடுவதற்கில்லை'' என்றெல்லாம் இதே பக்தவத்சலனர், அலட்சியமாக - ஆனல் ஆணவத்துடன் பதில் அளித்துவந்திருக்கின்றார்!

"சமுதாயத்தின் பெரும் பகுதியைப் பாதுகாக்க, சிலரின் உரிமைக்குத் தடை விதிக்கத்தான் வேண்டும்; எனவே ஊர்வலங்களுக்கும், பொதுக்கூட்டங்களுக்கும் தொடர்ந்து, சட்டத்தின்கீழ்த் தடை விதித்துவருவது குற்றமாகாது'' என்றும்கூட பக்தவத்சலனர்—முதலமைச்சர் பீடத்தில் அமர்ந்துகொண்டு—'ஆரோக்கிய அரசியல்' பேசிவந்தார்!

அதே பக்தவத்சலனர் இன்று, நகரக் காவல் துறைத் தலைமை அதிகாரி—அதே சட்டத்தின்கீழ்—'நகரத்தில் காவல் துறையின் முன் அனுமதியைப் பெற்றுக்கொள்ளாமல் ஊர்வலங்களும், கூட்டங்களும் நடத்தக்கூடாது' எனப் பிறப்பித்திருக்கின்ற தடையைக் கண்டதும், ஆயாசப்படுகின்றார்—ஆத்திரப்படுகின்றார்—அலறிப் புடைக்கின்றார்!

"அடுக்குமா? இது நீதியா? அறமா? இது சனநாயக முறையா?'' என்றெல்லாம் பக்தவத்சலனர் ஊளையிடுகின்றார்!

**"தேர்தல் பிரசாரத்தின்போது இத்தகைய உத்தரவு பிறப்பிக்கப்படுவதில்லை. சென்ற பொதுத் தேர்தலின்போது பிரதம மந்திரி மீதே கல் வீசப்பட்டது. அப்படி இருந்தும் கூட்டம் எதுவும் தடை செய்யப்படவில்லை.**

**"சனநாயகத் தேர்தல் வரலாற்றில் இத்தகைய தடையுத்தரவு ஒருபோதும் பிறப்பிக்கப்பட்டதில்லை.**

**"தற்போதுகூட, கூட்டங்களை நடத்த ஒலிபெருக்கியைப் பயன்படுத்தும்பொருட்டு லைசென்சுகளைப் பெறவேண்டியுள்ளது. கமிஷனரின் உத்தரவின்றி எந்தக் கூட்டமும் நடத்த முடியாது."**

இது, இன்றைய பக்தவத்சலனரின் திருவாக்கு!

"சென்ற பொதுத் தேர்தலின்போது, இந்தப் போலீசு சட்டத்தின்கீழ் கூட்டங்களுக்கும், ஊர்வலங்களுக்கும் தடை விதிக்கவில்லை'' என, முன்னாள் முதலமைச்சர் பக்தவத்சலனர் கூறியிருக்கின்றார். சென்ற பொதுத் தேர்தலில் இத்தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்ற உண்மையைத் தெளிவாகத் தெரிந்திருந்தும்கூட, 'சனநாயகத் தேர்தல் வரலாற்றில் இத்தகைய தடையுத்தரவு ஒருபோதும் பிறப்பிக்கப்பட்டதில்லை' என்ற பெரும் பொய்யை, மனமறிந்து பக்தவத்சலனர் பேசியிருக்கின்றார்!

"தேர்தல் காலத்தில் இப்படி ஓர் உத்தரவு இதுவரை பிறப்பிக்கப்பட்டது கிடையாது'' என, பக்தவத்சலனர் கூறியுள்ளது, நெஞ்சறிந்த பொய் என்பதை, நகர தலைமைக் காவல்துறை அதிகாரி விளக்கமாகக் கூறியுள்ளார்:—

"நகரப் போலீசு சட்டத்தின் 41-வது பிரிவின்கீழ் இத்தகைய உத்தரவு பிறப்பிக்கப்பட்டது இது முதல் தடவை அல்ல.

**"கடந்த பொதுத் தேர்தலின்போது, தேர்தல்வரை இத்தகைய உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. தேர்தல் முடியும்வரை சுமார் ஒன்றரை மாத காலம், கூட்டங்கள் ஒழுங்குபடுத்தப்பட்டன. இப்பொழுது நவம்பர் 10-ந் தேதி நள்ளிரவு வரை, 12 நாட்களுக்குத்தான் இந்த உத்தரவு அமுலில் இருக்கும்."**

முன்னாள் முதலமைச்சரின் கூற்று, 'வடிகட்டின பொய்' என்பதை, நகர காவல்துறை அதிகாரி அழுத்தந்திருத்தமாக அறிவித்துள்ளார்.

# பதிவேடு

கோவா அரசின் ஊழியர்களிலேயே அதிகப்படியான ஊதியம் பெறுவதில் இரண்டாவது இடத்தை வகிக்கும் அதிகாரி ஒருவர், ஏட்டளவிலேயே இருந்துவரும் ஒரு திட்டத்தில் வேலை பார்ப்பவராம்!

—'ஈவினிங் நியூஸ்'

★

தனது மாமனருக்கு அளிக்கப்பட்டிருக்கும் பங்களா ஒன்றை மத்தியப் பாதுகாப்பு அமைச்சர் சுவரண் சிங் உபயோகித்துவருகிறார்! ரூ. 600 மாத வாடகை பெறுமானமுள்ள அந்த மாளிகையின் தற்போதைய மாத வாடகை ரூ. 60 மட்டுமே!

—'ஆர்கனைசர்'

★

"முதலமைச்சராகவோ அல்லது மற்ற அமைச்சர்களாகவோ வருவதற்குப் பலர் ஏன் விருப்பப்படுகிறார்களோ தெரியவில்லை'' என, பஞ்சாப் முதலமைச்சர் குருநாம் சிங் ஆச்சரியம் தெரிவித்திருக்கிறார்! ஆறு மாத பதவிக் காலம் அவருக்கு அந்த அளவுக்குச் சலிப்பைத் தந்துள்ளதாம்!

— பேட்ரியட்'

# கானடா தூதுவருக்கு அண்ணா அழைப்பு

## உலகத் தமிழ் மாநாட்டில் கலந்துகொள்ள வேண்டுகோள்

சென்னை, அக். 31—

தம்மை வந்து சந்தித்த கானடா நாட்டுத் தூதுவரை, உலகத் தமிழ் மாநாட்டிற்கு வருமாறு முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் கேட்டுக் கொண்டார்கள்; அவரும் வருவதாக ஒப்புக்கொண்டார்.

மாநாட்டின் பார்வையாளராக அவர் கலந்துகொள்வார்.

# நிர்வாகத்துக்குத் திறமையான தலைமை இருப்பது சனநாயகத்துக்கு ஆபத்தாம்!

## கருத்தரங்கில் இந்தியப் பிரதிநிதியின் பேச்சு

"ஆட்சியில் தலைமைப்பீடத்தில் திறமையும் தகுதியும் மிக்க தலைவர் நிர்வாகம் செய்வது, சனநாயகத்துக்குப் பெரும் அளவில் கேடு பயக்கும் நிலையை ஏற்படுத்தும்''

என்று கன்வார்லால் சர்மா என்னும் இந்தியப் பிரதிநிதி, காமன் வெல்த் பாராளுமன்றக் கருத்தரங்கு ஒன்றில் பேசுகையில் கூறியிருக்கிறார்.

உகண்டாவில் நடக்கும் இந்தக் கருத்தரங்கில்,

"நிர்வாகத் தலைமைக்கு அதிகாரங்கள் அதிகமாகப்படுகிறது சனநாயகத்துக்கு ஆபத்து''— "சனநாயகம் இப்போதெல்லாம் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பொருளைக் கொடுக்கும் நிலைக்கு மாறிவிடுகிறது''

என்றும் பல பிரதிநிதிகள் பேசியிருக்கின்றனர்!

# ஜபல்பூர்-

## மேலும் சில செய்திகள்!

★ ஜபல்பூர் மாநாடு நடந்த இடம் பல்கலைக் கழக மைதானம். அங்கே, பிரதிநிதிகளிடமிருந்து தங்கும் கட்டணமாக—தலைக்கு ரூ. 2 விதம், 300 அறைகளுக்கான வாடகை வசூல் தொகையை அப்பல்கலைக் கழகம், ஏழை மாணவர்களுக்கு மானியமாக வழங்க இருக்கிறது!

★ இன ஒற்றுமையின் அவசியம் பற்றிய தீர்மானத்தில் பேசிய எஸ். கே. பாட்டில், ஆங்கிலத்தில் பேச ஆரம்பித்தார்! பலத்த எதிர்ப்புக் குரல் கிளம்பியது! 'இந்தியில்தான் பேச வேண்டும்' என, பெரும் குரல்கள் எழுந்தன! கடைசியில் பணிந்தவர் பாட்டீல்தான்!

★ கட்சியின் பொருளாதார—சமுதாயக் கொள்கைகளில் நம்பிக்கை இல்லாதவர்களை வெளியே அனுப்பி விடுமாறு தலைமைக்கு வேண்டுகோள் விடுத்து மன்றாடிப் பேசியிருக்கிறார்—மணிராம் கஞ்சம் என்னும் உத்தரப்பிரதேசத்துக் காங்கிரசுக்காரர்!

# இந்திக்காரருக்கே காங்கிரசுத் தலைமைப் பதவி?

## இந்திரா ஆதரவாளரை எதிர்க்கிறார் மொரார்ஜி

ஜபல்பூர், அக். 31—

காங்கிரசுக் கட்சித் தலைவர் பதவிக்குப் போட்டியிட டி. பி. மிஸ்ரா ஆயத்தமாகிறார்!

மத்தியப் பிரதேச சட்டமன்றக் காங்கிரசுக் கட்சித் தலைவர் பதவியை இராஜினாமா செய்ததன் மூலம் டி. பி. மிஸ்ரா, காங்கிரசுக் கட்சித்தலைவர் பதவிக்குப் போட்டியிடும் வாய்ப்புகள் அதிகரித்துள்ளன.

ஆனல், சொந்த மாநிலமான மத்தியப் பிரதேசத்தில் நற்பெயர் சம்பாதித்துக்கொள்ளாத ஒருவரை, காங்கிரசுத் தலைவராகத் தேர்ந்தெடுப்பதற்குத் துணைத் தலைமை அமைச்சர் மொரார்ஜி தேசாய் முழுமூச்சாக எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறார்.

ஆனல் காங்கிரசுத் தலைமைப் பதவிக்கு இம்முறை, 'இந்தி பேசும் பகுதியைச் சேர்ந்தவரையே தேர்ந்தெடுக்க வேண்டும்'' என்று மத்திய தலைவர்கள் சிலர் விரும்புகிறார்கள் என்றும் தெரிகிறது.

'தலைமை அமைச்சர் இந்திரா காந்தியும், மிஸ்ராவை ஆதரிக்கக் கூடும்' எனச் சொல்லப்படுகிறது. (ஒருமுறை பண்டித நேருவையே மிஸ்ரா வன்மையாகக் கண்டித்துப் பேசியிருக்கிறார் என்பது நினைவு கூரத்தக்கது.)

ஒருவேளை, மொரார்ஜி மாறினலும் மாறக்கூடும்; நந்தா அல்லது தேபர் ஆகியோருக்குப் பதிலாக, மிஸ்ரா காங்கிரசுத் தலைவராவது, தேசாய்க்கு ஏற்புடையதாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

(3-ம் பகக்ம் பார்க்க)

'கெட்டிக்காரன் புளுகு எட்டு நாட்களுக்குள் அம்பலமாகி விடும்' எனச் சொல்லப்படுவதுண்டு; ஆனல், முன்னாள் பக்தவத்சலனரின் புளுகு, இருபத்திநான்கு மணி நேரத்துக்குள் அம்பலமாகிவிட்டிருக்கிறது! 'ஓடம் வண்டியில்—வண்டி ஓடத்தில்' என்ற பழமொழியில் நிரம்பப் பொருள் உண்டு. காவல்துறை அதிகாரி கூறுகின்ற மறுப்பைக் கேட்க வேண்டிய நிலைக்கு பக்தவத்சலனர் தள்ளப்பட்டுவிட்டிருக்கின்றார்.

இப்படி ஓர் அரசியல் வீழ்ச்சியை -- சரிவை தம் வாழ்நாளில்—அதிலும், தாம் மூப்படைந்துவிட்ட நிலையில்—சந்திக்கவேண்டியிருக்கும் என்பதை, பக்தவத்சலனர் நினைத்துக்கூடப் பார்த்திருக்க மாட்டார். தாம் கூறியதை, 'வடிகட்டின பொய்' என மறுத்து ஓர் அதிகாரி கூறுவதைத் தாம் கேட்டுக்கொள்ள வேண்டியிருக்கிறதே என்பதற்காக, மீஞ்சூர் முதியவர் இரத்தக் கண்ணீர் சிந்தத்தான் சிந்துவார்! யார் என்ன செய்வது! அவருடைய இன்றைய நிலைகண்டு நாமும்கூடத்தான் பரிதாபப்படுகின்றோம்!

'பதவி கைமாறிப் போச்சு—காலமும் மாறிப்போச்சு' என்ற உண்மையை, இனியாவது பக்தவத்சலனர் உணர்ந்துகொண்டு, சங்கீத இன்பத்தில் மூழ்கிக் கிடப்பாராக!

—கா. க.

## தாராவி தென்னவர் மன்ற ஆண்டு விழா

### வி.கே. கிருஷ்ணமேனனும் கலந்துகொண்டார்

பம்பாய்—தாராவி தென்னவர் மாமன்ற மூன்றும் ஆண்டு விழா, 15—10—67 காலை 10 மணிக்கு, கணேசர் கோயிலில் நடைபெற்றது.

மாணவர்களுக்கு திருக்குறள் நூல் வழங்கும் நிகழ்ச்சியும் இடம் பெற்றது.

முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் திரு. வி. கே. கிருஷ்ணமேனன், தோழர் எஸ். அமர்நாத், தோழியர் விஜயலட்சுமி அமர்நாத், தோழர்கள் ஆ. திராவிடமணி, மதுரை தமிழ்மாறன், அல்போன்சு-புதியம்புத்தூர், எம். டி. இராமசாமி ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

மாமன்றக் கூட்டுச் செயலாளர் சு. தங்கவேலன் விருந்தினரை வரவேற்றுப் பேசுகையில், விரைவில் ஒரு படிப்பகம் நிறுவ இருப்பதை எடுத்துரைத்து அனைவரின் ஆதரவையும் கோரினார்.

மாமன்றத் தலைவர் த. மு. பொற்கோ கூட்டத்திற்குத் தலைமைதாங்கினார்.

திருமதி விஜயலட்சுமி அமர்நாத், மாணவர்களுக்குத் திருக்குறள் நூலை மாமன்றச் சார்பில் வழங்கினார்.

தோழர்கள் மதுரை தமிழ்மாறன், அல்போன்சு, எம்.டி.ஆர். ஆகியோர் பேசியபின், பம்பாய் தி.மு. கழக முன்னணித் தலைவரும், மாமன்ற அமைப்பாளருமான எஸ். தியாகராசன் பேசுகையில், தாராவிப் பகுதியில் ஓர் உயர்நிலைப் பள்ளி அமைய வேண்டியதன் அவசியத்தையும், அந்த முயற்சிற்கு திரு. கிருஷ்ணமேனன், திரு. அமர்நாத் ஆகியோர் துணை நிற்க வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டனர்.

திரு. அமர்நாத் பேசுகையில், உயர்நிலைப் பள்ளி அமையத் தன்னாலியன்ற அளவு துணைநின்று தொண்டாற்றுவதாகக் குறிப்பிட்டார்.

தோழர் ஆ. திராவிடமணி பேசுகையில், கேரள – தமிழக உறவைச் சுட்டிக்காட்டி—தென்னவர்களுக்கு உலகெங்கணும் ஏற்பட்டுள்ள அவல நிலையைத் தெள்ளத் தெளிய விளக்கி—அந்த நிலை மாற, திரு. கிருஷ்ணமேனன் தூதுவராக இருந்து தொண்டாற்ற வேண்டுமெனக் குறிப்பிட்டார்.

இறுதியில் திரு.வி.கே. கிருஷ்ணமேனன், உலக அரங்கில் இந்தியாவின் நிலைமையையும், கடமையையும் பற்றி விரிவாகப் பேசினார்.

மாமன்றப் பொருளாளர் சி. இரவீந்திரன் உட்பட நிர்வாகிகளும், மன்ற உறுப்பினர்களும் விருந்தினரை வரவேற்கும் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

கூட்டுச் செயலாளர் நெல்லை வளவன், விருந்தினர்க்கு கைத்தறியாடை அணிவித்து நன்றியுரை நவின்றார்.

## கோவை மாவட்ட பஞ்சாலை நிர்வாக ஊழியர்கள் சங்கம்

கோவை மாவட்டப் பஞ்சாலை நிர்வாக ஊழியர்கள் முன்னேற்ற சங்க அமைப்புக் கூட்டம், 2—10—67-ல் காட்டூர் கோபால் தலைமையில் நடைபெற்றது; அதுபோது, நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—

தலைவர்: சு. துரைசாமி எம்.எல்.ஏ.; துணைத் தலைவர்கள்: சண்முகம், வே. பி. குருசாமி; பொதுச்செயலாளர்: காட்டூர் க. கோபால்; துணைச் செயலாளர்கள்; இரா. முருகேசன், ஏ. எஸ். மணி; பொருளாளர்: கே. இராமச்சத்திரன்; மற்றும் 14 பேர் செயற்குழு உறுப்பினர்கள்.

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

காங்கிரசுத் தலைமைப் பதவிக்கு சாதிக் அலி, எஸ். என். மிஸ்ரா, சுகாதியா ஆகியோரின் பெயர்களும் அடிப்படுகிறது.

## கேரளப் பகுதியில் க. அன்பழகன்

### பல்வேறு கூட்டங்களில் பங்கேற்பு

23—10—67 அன்று கொல்லங்கோடு தி. மு. க. கிளையின் சார்பில் பொதுக்கூட்டம் நடைபெற்றது; நாடாளுமன்ற தி. மு. க. குழுத் தலைவர் பேராசிரியர் க. அன்பழகன் எம்.ஏ. அவர்கள் கலந்துகொண்டு பேசுகையில் தமிழகத்தில் தி. மு. கழக அரசின் சாதனைகளை விளக்கினார். 'அறிஞர் அண்ணாவின் சனநாயக நம்பிக்கையும், கொள்கைப் பிடிப்பும் தான் வெற்றிக்குக் காரணம்' என்பதை விளக்கினார்; 'கேரள மக்கள், சனநாயக நம்பிக்கை வளரச் செய்ய கேரளத்தில் இயங்கும் தி. மு, கழகத்தின் வளர்ச்சிக்கு நல்லாதரவினைத் தரவேண்டும்' எனக் கேட்டுக்கொண்டார்.

கூட்டத்தில் கோவை தமீமும் பேசினார்.

கொல்லங்கோடு கொச்சப்பன் நன்றி கூறினார்.

பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் பாலக்காடு மாவட்டத்தில் கொடுவாயூர், கொல்லங்கோடு, மீனாட்சிபுரம் முதலிய ஊர்ப் பொதுக்கூட்டங்களிலும் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றினார்.

## பெரம்பலூரில் சீரணியின் ஆக்கப் பணி

பெரம்பலூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த சீரணித் தொண்டர்கள், 23-10-67 காலை 8-மணியளவில் ஒன்றிய அலுவலகத்தில் கூடி, தோட்டப் பணி புரிந்தனர். ஆணையாளர் வி. கிருஷ்ணன் மேற்பார்வையிலும், விவசாய விரிவு அலுவலர் திரு. டி. பாலசுப்பிரமணியம் கண்காணிப்பிலும் சுமார் 25 சென்ட் நிலத்தில் மேடு பள்ளங்கள் நிரவி—வரப்பெடுத்து—பாத்திகள் பிடித்து — வாய்க்கால் செப்பனிட்டு—மிளகாய் கன்றுகள் நட்டு நீர் பாய்ச்சினர். வேலையின் மதிப்பு ரூ. 60 ஆகும்.

விவசாய விரிவு அலுவலர், சீரணித் தொண்டர்களுக்குப் பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகள் சம்பந்தமாக நேர்முக செய்முறைப் பயிற்சியளித்தது மிகவும் பயனுடையதாக இருந்தது.

கல்வி விரிவுத் தொண்டர்களுக்குப் பொதுப் பணிகள் திட்டமிட்டு மாதந்தோறும் செய்யவேண்டிய அவசியம் முறை பற்றி விளக்கிக் கூறி வந்திருந்த அனைவருக்கும் நன்றி கூற, முகாம் பணி முடிவுற்றது.

## எஸ். ஐ. வி. ஈ. டி. கல்லூரி தமிழ் மன்றத் தொடக்கவிழா

25—10—67-ல் சென்னை கௌரிவாக்கம் எஸ். ஐ. வி. இ. டி. கல்லூரியின் தமிழ்மன்றத் தொடக்க விழா சிறப்பாக நடைபெற்றது.

கல்லூரித் தமிழ்த் துறைத் தலைவர் எஸ். சிவராமலிங்கம் எம்.ஏ. அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

கல்லூரி முதல்வர் பேராசிரியர் எஸ். இராசேந்திரன் தலைமை தாங்கினார்.

தமிழக மேலவை உறுப்பினர் பேராசிரியர் க. அறிவழகன், கல்லூரி ஆட்சிக் குழுச் செயலாளர் என். வெங்கடகிருஷ்ண (செட்டியார்) அவர்கள் நன்கொடையாக வழங்கிய திருவள்ளுவர் திருவுருவப் படத்தினைத் திறந்துவைத்து, மாணவர்கள் திருவள்ளுவர் நெறி நிற்க வேண்டியதன் அவசியத்தைக் குறித்து விளக்கிப் பேசினார்.

தமிழரசுக் கழகத் தலைவர் ம. பொ. சிவஞானம் எம்.எல்.ஏ. அவர்கள், கல்லூரித் தமிழ் மன்றத்தினைத் திறந்துவைத்து, கல்லூரிகளில் தமிழே பாட மொழியாக இருக்கவேண்டியதன் இன்றியமையாமை குறித்துச் சிறப்புச் சொற்பொழிவாற்றினார்.

மாணவச் செயலாளர் ஆர். சிவராமன் நன்றி கூறினார்.

## எப்பக்கமும் வந்து நுழையுது இந்தி!

### ஊதியம் பற்றிய ரிசர்வ் பாங்கி அறிக்கை இந்தியில்!

ஊதியம், விலைவாசிகள், வருமானம் பற்றிய இந்திய ரிசர்வ் பாங்கியின் அறிக்கை, இப்போது இந்தி மொழியிலும் வெளியாகியுள்ளது!

ஏற்கனவே, சென்ற சனவரி மாதத்தில் வெளியிடப்பட்டுள்ள ஆங்கில அறிக்கையின் சுருக்கமான இந்தி மொழிப் பதிப்பு வெளியாவது, 'சாதாரண மக்களுக்கு நிலைமைகளை எடுத்து விளக்குவதற்காக' என்று கூறப்பட்டிருக்கிறது.

'மற்ற மொழிகளிலும் இது போன்ற வெளியீடுகள் வரவிருக்கின்றன' என்று இப்போதைய செய்தி மேலும் கூறியுள்ளது.

## சிறப்புத் தமிழில் கட்டாயத் தேர்வு

சென்னை, அக். 31—

உயர்நிலைப் பள்ளிகளுக்கான மொழித் திட்டத்தில், இரண்டாவது பகுதியின் கீழ்ப் படிப்பதற்குரிய ஒரு மொழியாகச் 'சிறப்புத் தமிழை' அறிவித்து, மொழித் திட்டத்தின் இரண்டாவது பகுதியை, 'பகுதி இரண்டு—சிறப்புத் தமிழ் அல்லது இந்தி அல்லது பகுதி ஒன்றின்கீழ் எடுத்துக் கொள்ளப்படாத ஏதாவதொரு மொழி' என்று திருத்தம் செய்து, கடந்த சூலைத் திங்களில் அரசு உத்தரவிட்டிருந்தது.

பகுதி இரண்டின்கீழ் எடுத்துக் கொள்ளப்படும் எந்த மொழியும்—சிறப்புத் தமிழ் உட்பட—கட்டாய மொழியாக இருக்கும் என்பதையும், அந்த மொழியில் தேர்வு கட்டாயமாகும் என்பதையும், ஆனால் அந்த மொழியில் எடுக்கும் மதிப்பெண் மாணவர்கள் தேர்வு பெறுவதற்கோ அல்லது எஸ். எஸ். எல். சி. திட்டத்தின்கீழ் தகுதி பெறுவதற்கோ கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது என்பதையும் அரசு இப்பொழுது தெளிவுபடுத்த விரும்புகிறது.

ஆனால் இந்த மதிப்பெண், எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் 'பரிவுப் பரிசீலனை'க்கு (மாடரேஷன்) கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்.

## சென்னை 82-வதுவட்ட இராசேந்திரன் மன்றம்

23—10—67-ல் சென்னை 82-வது வட்டம் கணேசபுரத்தில் மாணவன் இராசேந்திரன் மன்றம் அமைக்கப்பட்டது.

வட்டச் செயலாளர் எம். கே. கபாலி அவர்களை ஆணையாளராகக்கொண்டு மன்ற நிர்வாகிகள் தேர்தல் நடைப்பெற்றது:—

தலைவர்; டி. கன்னியப்பன்; துணைத் தலைவர்: பி. இ. கபாலி; செயலாளர்: மு. சீனிவாசன்; துணைச்செயலாளர்: எஸ். எஸ். மணி; பொருளாளர்: கி. குப்புசாமி; 8 பேர் செயற்குழு உறுப்பினர்கள்.

## வால்பாறையில் பொதுக்கூட்டம்

வால்பாறை நகர தி. மு. கழகம்—திராவிடத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் ஆகியவை சார்பில், 22—10—67 நண்பகல் 12 மணியளவில் ஸ்டாப் கிளப் திடலில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் வே. ஏ. தாசன் தலைமைதாங்கினார்.

நாடாளுமன்ற தி. மு. க. தலைவர் பேராசிரியர் க. அன்பழகன் எம்.ஏ., குன்னத்தூர் க. அன்பரசு, வால்பாறை சட்டமன்ற உறுப்பினர் இ. இராமசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

## 'கோ. சு. மணி போன்றவர்களின் தியாகத்தாலேயே வளர்ந்தோம்'

### 'எவ்வளவு உயர்ந்தாலும் பழைய தொண்டர்களை மறவோம்'

### நினைவுச் சின்னத் திறப்பு விழாவில் அண்ணா உருக்கமான உரை

சென்னை, அக். 31—

அகவிலைக் குறைப்பு அறப்போரில் ஈடுபட்டுச் சிறையிலேயே உயிர்நீத்த தியாகச் செம்மல் கோ. சு. மணியின் கல்லறையைத் திறந்துவைத்த அறிஞர் அண்ணா அவர்கள், கோ. சு. மணியின் அரும்பணிகளையும், பொதுப் பணியில் அவர் காட்டிய ஆர்வத்தினையும் எடுத்துக்கூறி, அவருடைய தியாகத்தைப் பாராட்டி உருக்கமாக உரையாற்றினார்கள்.

மயிலை இடுகாட்டில் 28—10—67 மாலை நடைபெற்ற இந்த நினைவுச் சின்னத் திறப்பு விழாவுக்கு மேயர் இரா. சம்பந்தம் தலைமைவகித்தார்.

அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து, சட்டமன்ற உறுப்பினர் இராம. அரங்கண்ணல், முன்னாள் மேயர் வி. முனுசாமி, துணை மேயர் டி. கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் கலந்துகொண்டு பேசினர்.

மேயர் சம்பந்தம் அவர்கள், கோ. சு. மணியின் மகன் கல்லூரிப் படிப்பு முடிக்கும்வரை மாதம் ரூ. 10 அளிப்பதாக அறிவித்து, அந்தச் சிறுவனிடம் பத்து ரூபாயை மேடையிலேயே அளித்தார்.

### இராம. அரங்கண்ணல்

சட்டமன்ற உறுப்பினர் இராம. அரங்கண்ணல் பேசுகையில்குறிப்பிட்டதாவது:—

"கோ. சு. மணி நம்மைவிட்டுப் பிரிந்துவிட்டாலும், நம் உள்ளத்தை விட்டுப் பிரியாமல் இருக்கிறார். அவர் தி. மு. கழகத்திற்கு எந்தெந்தவகையில் பணியாற்றினார் என்பதையும், தேர்தல் நேரத்தில் அவர் எப்படிப் பணியாற்றுவார் என்பதையும் நாம் மறந்துவிட முடியாது.

தமிழக அரசை நாம் இப்பொழுது ஏற்படுத்தியிருக்கிறோம் என்றால், கோ. சு. மணியைப்போன்ற தியாகிகளால்தான் என்பதை நாம் உணராமல் இருக்க முடியாது.

அவர் எந்த இலட்சியத்திற்காகப் பாடுபட்டாரோ அந்த இலட்சியத்திற்கு நாம் பாடுபடுவோம் என்று இந்த நேரத்தில் உறுதி எடுத்துக்கொள்ள வேண்டும்."

### அமைச்சர் சத்தியவாணிமுத்து

அமைச்சர் சத்தியவாணிமுத்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"கோ. சு. மணியை இப்பொழுது நினைத்தாலும் கண்ணீர் வருகிறது. அவர் இறந்த நிகழ்ச்சியை நினைத்துப் பார்த்தால் யாருக்கும் அழுகை வராமல் இருக்காது.

அவர் சிறைக்குச் செல்லும்போது, 'உயிரோடுதான் திரும்பி வருவார்' என நினைத்தோம்; ஆனால், தாய் கதற—மனைவி ஏங்கி அழ—பிணமாகத்தான் வெளியே வந்தார்!

'அரிசி விலை—அகவிலை குறைய வேண்டும்' என்பதற்காகச் சிறைப்பட்டுச் சிறைச்சாலையிலே மாண்டார். அவர் எதற்காக மடிந்தாரோ அதை நிறைவேற்றி, ரூபாய்க்குப் படி அரிசி போடுகிறோம்!

தொண்டர்களுக்கு மதிப்பளிக்கும் தி. மு. கழக அரசைக் காப்பது மனிதத்தன்மையுள்ளவர்களின் கடமையாகும்."

### அறிஞர் அண்ணா

பின்னர், அறிஞர் அண்ணா அவர்கள் பேசியதாவது:—

"நண்பர் கோ. சு. மணி, கழகத்திற்காக ஆற்றிய அரும்பணியை இன்று நினைத்துப் பார்த்தால்கூட உண்மையிலே அழுகை வரும்! கழகத்திற்கு அவரது இழப்பு ஈடுசெய்ய முடியாத இழப்பாகும்!

நாம் கூடியிருக்கும் இந்த இடம், எல்லாவற்றிற்கும் முடிவு தெரியும் இடம்! செல்வந்தர்களாக இருந்தாலும் — தரித்திரர்களாக இருந்தாலும் — வியாபாரம் செய்து பொருளீட்டும் வணிகர்களாக இருந்தாலும்—வல்லரசர்களாக இருந்தாலும் அவர்கள் இங்கே அடக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள்!

ஆனால் அவர்களுக்காக, ஒரு முதலமைச்சர் — மேயர்—துணை மேயர் — முன்னாள் மேயர் — அரிசன நல அமைச்சர் ஆகியோர் இப்போது கூடியிருப்பது போல் ஒருங்கு கூடி மரியாதை செய்திருக்கிறார்களா என்று கொஞ்சம் சிந்தித்துப் பார்த்தேன்; யாரும் அப்படிச் செய்ததாகத் தெரியவில்லை!

இதிலிருந்து என்ன தெரிகிறது? குடும்பப் பாசம் உள்ள இடம்—தொண்டர்களுக்கு மதிப்பளிக்கும் இடம்—நம் இயக்கம் அன்றி வேறு எதுவாக இருந்திட முடியும்?

எவ்வளவு உயர்ந்தாலும், பழைய தோழர்களை மறந்துவிடாமல், 'அவர்கள் தியாகத்தாலும் தொண்டாலும்தான் தி. மு. கழகம் வளர்ந்தது' என்பதை நினைவுறுத்தவே இங்கு கூடியிருக்கிறோம்!

'தி. மு. கழகம் எதனால் வளருகிறது' என்று கேட்கிறார்களே—அவர்களெல்லாம் 'இங்கு வந்து பார்த்தால் தெரியும்—'இப்படிப்பட்ட தியாகிகளால்தான்வளர்ந்தது' என்பது!

'உழைத்தால்தான் பிழைக்க முடியும்' என்ற ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர் கோ.சு.மணி.

மேயர் அவர்கள், 'நம்முடைய மணி' என்றும், என்னைப் போன்ற அமைச்சர்களும், நீங்களும், 'நமது மணி' என்றும் கூறும் பாச உணர்ச்சி நமக்கு இருக்கிறது!

ஆனால், முன்பு அரசாண்டவர்களுக்கும் இந்த உணர்ச்சி இருந்ததா? ஆனால் அவர்கள், பெருந்தலைவர்களுக்கு மரியாதை செலுத்தத்தான் இடுகாட்டிற்குச் சென்றார்களே தவிர, நம்மைப்போல் தொண்டர்களுக்கு மரியாதை செலுத்தச் செல்லவில்லை!

கள்ளங் கபடமற்ற முறையில் நல்லியல்போடு வாழ்ந்து–விலைவாசிப் போராட்டத்தில் சிறைசென்று – சிறைச்சாலையிலேயே நோய்வாய்ப்பட்டு மாண்டவர்! இளமைப் பருவத்தில் அவர் இறந்தாரே தவிர, நாற்பது ஆண்டுகளில் செய்யும பணியைப் பத்து ஆண்டுகளில் செய்து முடித்திருக்கிறார்!

அவர் ஆசைகள் நிறைவேற்றப்பட்டிருப்பதை—கனவுகள் நனவாக்கப்பட்டிருப்பதை — எண்ணங்கள் ஈடேற்றப்பட்டிருப்பதை அவர் இருந்து காண நாம் கொடுத்து வைக்கவில்லை!

தி.மு.கழகத்தின் மாண்பை ஊருக்கும் உலகுக்கும் தெரியப்படுத்துவதற்காக அமைந்த இந்த நினைவுச் சின்னம், கழக வரலாற்றுச் சின்னமாக அமையட்டும்!"

## வாட்டர்பால் தி. மு. க. பொதுக்கூட்டம்

வால்பாறை வட்டம் வாட்டர்பால் தி. மு. க. சார்பில் 22-10-67 மாலை 5-மணியளவில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

பேராசிரியர் க. அன்பழகன் எம். ஏ., எம்.பி, குன்னத்தூர் அன்பரசு, வால்பாறை சட்டமன்றத் உறுப்பினர் இ. இராமசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

# நந்தி மறைக்குதே!

'அரிப்பு எடுக்கிறதே' என்று கொள்ளிக்கட்டையை எடுத்துச் சொரிந்துகொண்ட நிலையில் இருக்கிருர்—அனைத்திந்தியக் காங்கிரசுத் தலைவர் காமராசர்!

வங்காளத்துக் காங்கிரசைச் சீரமைப்பதற்காக அனுப்பப்பட்ட குல்சாரிலால் நந்தா, இப்போது காமராசருக்கே எதிரியாய் வந்து முடிந்து விட்டார்!

நந்தாவின் திட்டத்துக்கு, முதலில் பயங்கர மவுனம்! பின்னர், சற்று அடிப்படைத் திருத்தம்! இப்படி, வங்காள விவகாரத்தில், தாம் விரும்பியதைச் செய்த காமராசரையும் மீறி அந்த மாநிலத்துக்காரர்கள், புதுக் குழப்பம் ஒன்றையும் கொடுத்திருக்கிருர்கள்!

ஆங்கில நாளிதழ் ஒன்று கேலிப் படம் போட்டிருப்பதைப் போல், வங்காளத்துக் காங்கிரசுக்காரர்கள், தற்காலிகக் கமிட்டியையும் பதவி நீக்கம் செய்துகொண்டு உரு இல்லாமல் ஆக்கியிருப்பது, நந்தாவையும், காமராசரையும், தலைமைப்பீடத்தையும் அப்படியே அருகில் உள்ள வங்காளக் குடாக்கடலில் தூக்கி எறிந்திருப்பதற்குத்தான் சமம்!

ஜபல்பூரில் தோன்றிய இந்த மாற்றத்துக்குப் பின், காங்கிரசுத் தலைவர் தேர்தல்களுக்கான பெயர்களில் நந்தாவின் பெயர் அழுத்தமாகப் பேசப்பட்டு வருகிறது!

### உள்ளும் புறமும்

ராம் சுபாக் சிங்—அனுமந்தையா—தேபர் போன்ற மற்ற பெயர்கள் கூறப்படுவது, ஒப்புக்காக அல்லது உபசாரத்துக்குத்தானே தவிர, நந்தாவின் பெயருக்குப் பின்னல் உள்ள நிலைமைகள் அவைகளுக்கு இல்லை!

வங்காள விவகாரத்தில் தனது திட்டத்தைக் குப்பைத் தொட்டியில் போடுவதற்குச் சமமான தாக்கிவிட்டிருக்கும் நந்தா, உள்ளுக்குள் காமராசர்மீது வெறுப்புக் காட்டிக் கொண்டிருப்பதில் வியப்பேதும் இல்லை!

நந்தாவின் திட்டமே—காமராசரைப் புறக்கணித்த நிலையில்—இந்திராவின் கருத்தில் உதித்ததுதான்!

எனவே, புண்பட்ட நிலையில் இப்போது நந்தா, 'தலைமைப் போட்டிக்குத் தயாராகிருர்' என்ருல், 'அவருக்குப் பின்னல் பக்கபலமாக இந்திரா இருப்பார்' என்பதில் சந்தேகம் ஏதும் இருக்கமுடியாது!

இந்தியாவுக்கான தலைமையமைச்சர்களை இருமுறை தேர்ந்தெடுத்த காமராசர், 'தலைவர் பதவிக்கான தேர்தலை அவ்வளவு சுலபத்தில் நடத்திவிடலாம்' என்பது, 'இருட்டறையில் கறுப்புப் பூனையைக் கண்களால் பார்த்துவிடுகிறேன்' என்பதற்குச் சமமானதுதான்!

நேருவைப்போல், தானே கட்சித் தலைமைப் பதவியையும் மேற்கொள்ள விருப்பம் இருப்பதாக இந்திரா ஒரு கருத்தினை வெளியிட்டிருப்பது, 'காமராசரைத் தேர்தல் களத்தினின்றும் அப்புறப்படுத்தும் ஒரு உபாயமாக'த்தான் இருக்கமுடியுமே தவிர, உண்மையான உள்ளக்கிடக்கையாக இருக்க நியாயமில்லை!

வங்காளக் காங்கிரசு விவகாரம் இந்திராவுக்கு எதிர்பாராத நன்மையாகவும், காமராசருக்கு திடீர் பேரிடியாகவும் அமைந்துவிட்டிருக்கிறது!

இந்தச் சூழ்நிலையில், களத்தில் இறக்கிவிடப்பட்டிருப்பவர்தான் நந்தா! முன்னுள் உள்துறை அமைச்சரான அவர், தனி மனிதராகப் போட்டியிடவில்லை—பிரதமரின் வேட்பாளராகக் களத்தில் குதித்திருக்கிருர்!

இவ்வளவு உள்நிலைமைகளும், பத்திரிகைகளில்—வெளிஉலகில்—அலசி அலசி எடுத்துக்காட்டப்பட்டு வரும்போது, 'போட்டி இல்லையென்ருல் தலைவராக இருப்பேன்' என்று காமராசர் கூறி வருவதை, 'ஏதோ இராசதந்திரம்' எனக் கருதிக்கொண்டிருப்பவர்களும் இருக்கிருர்கள்!

தங்கிச் சாப்பிட்ட நாளெல்லாம் சாப்பிட்டுவிட்டு, கடைசியாக, 'மலையைத் தூக்கி என் தலைமீது வையுங்கள்; பின்னர், தூக்குகிறேனு இல்லையா என்று பாருங்கள்' என்று ஒரு அரசவையையே ஏமாற்றிய எத்தனின் கதையைத்தான் காமராசரின் கருத்து நினைவுபடுத்துகிறது!

'போட்டி இருக்கிறது' என்பது சுவர்மேல் எழுத்தாக இருக்கும்போது, போட்டி இல்லையென்ருல் 'நான் நீடிக்கிறேன்' என்று திரும்பத் திரும்பக் காமராசர் கூறுவது, பினனல், 'நான் ஏன் திரும்பவும் தேர்ந்தெடுக்கப்படவில்லை' என்று விளக்கம் தர ஒரு சாதனமாக இருக்கமுடியுமே தவிர, அவரது சாமர்த்தியத்துக்கு ஒரு அறிகுறியாக அமையமுடியாது!

மலையையும் தூக்கமுடியாது—தூக்கியே வைத்தாலும் தாங்கமுடியாது! சாத்தியக் கூறுகளுக்கு ஒத்துவராத இரண்டினை இணைப்பது, இடையில் தப்பித்துக் கொள்வதற்கு இருக்கும் ஒரு மார்க்கம்!

காங்கிரசுத் தலைவர் தேர்தலில் காமராசரின் ஆயுதமாக இருக்கப் போவது இதுதான்!

—எஸ். ஆர்.

## மூன்ருண்டுச் சட்டப் படிப்பு---பல்கலைக்: கழகம் முடிவு

சட்டப் படிப்பை (பி.எல்.) மூன்று ஆண்டுக் காலத்துக்கு உயர்த்த பல்கலைக் கழகம் முடிவு செய்துள்ளது.

இப்போது, பி. எல். படிப்பு இரண்டு ஆண்டுக்காலமாக உள்ளது.

மூன்ருண்டு பட்டப் படிப்பு முறை 1968—69-ம் ஆண்டு முதல் நடைமுறைக்கு வரும்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு; அறிவகம் அச்சகத்தில் (24, [illegible] [illegible]

## மாறனை ஆதரித்து துறைமுகத் தொழிலாளர் ஊர்வலம்

தென் சென்னை தி.மு.க. வேட்பாளர் முரசொலி மாறன் எம்.ஏ. அவர்களை ஆதரித்து மாபெரும் சைக்கிள் ஊர்வலம் 4—11—67 காலை 8 மணியளவில், சென்னை போர்ட் அண்டு டாக் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத் துணை தலைவர் மு. வேதாசலம் எம்.எல்.ஏ. தலைமையில் புறப்படும்: ஊர்வலத்தைச் சங்கத் தலைவர் கி. மனோகரன் எம்.ஏ., எம்.பி. துவக்கிவைப்பார்; துறைமுகம் மெயின் கேட்டிலிருந்து (எம்-1, போலீசு நிலையம் எதிரிலிருந்து) ஊர்வலம் புறப்படும்.

## நடக்க இருப்பவை

### 3--11--67

**சென்னை 61-வது வட்டம்**

மக்கள் மன்றச் சார்பில் இரவு 7-மணிக்கு புரசைவாக்கம் பொன்னபப முதலி தெருவில்; தலைவர்: மணி; பேசுவோர்: அமைச்சர் செ. மாதவன். கி. மனோகரன் எம்.ஏ.,எம்பி., ஏ. கே. ஏ. அப்துஸ் சமது எம்.ஏ., எம்.பி. முரசொலி மாறன் எம்.ஏ., நா. கணபதி பி.எஸ்சி. பி.எல்., செ. சுந்தரராசன்.

### 4--11--67

**சென்னை 60-வது வட்டம்**

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு புதுப்பேட்டை பி. வி. கோயில் தெருவில்; தலைவர்: பூ. நடராசன்; பேசுவோர்: பி. உ. சண்முகம், மதுரை முத்து எம்.எல்.சி., பெ. சீனிவாசன் எம்.எல்.ஏ., த. சோணையா, முரசொலி மாறன் எம்.ஏ., கோ. இளவரசு எம்.சி., மு. பச்சையப்பன், கே. எஸ். தங்கவேல்.

**சென்னை 73-வது வட்டம்**

தி. மு. க. சார்பில் இரவு 9 மணிக்கு சேப்பாக்கம் சி. என். கே. ரோட்டில்; தலைவர்: அ. வீ. அகிலன்; பேசுவோர்: அமைச்சர்கள் இரா. நெடுஞ்செழியன், ஏ. கோவிந்தசாமி, சத்தியவாணிமுத்து, சாதிக்பாட்சா, மற்றும் கோ. பிச்சை.

**நெய்வேலி**

பால் பண்ணைத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத் துவங்க விழா; மாலை 6 மணிக்கு 4-வது வட்டத்தில் (பால் பண்ணை அருகில்); தலைவர்: டி. இராமசாமி; பேசுவோர்: காட்டூர் கோபால், வி. கிருட்டினமூர்த்தி எம்.பி., எம். செல்வராசு, வெ. இராமநாதன், எஸ். இராமச்சந்திரன் எம்.எல்.ஏ., ஆண்டகுருநாதன், ஆர். அண்ணுவி, துரை. வீராசாமி.

## வெல்லத்தின் விலையைக் குறைக்க தமிழக அரசு நடவடிக்கை

சென்னை, அக். 31—

1960-ம் ஆண்டு வெல்லம்—கண்டசாரி சர்க்கரை வணிகர்கள் உரிமம் ஆணையின்கீழ், உரிமம் பெற்றுள்ள யாரும், 'சென்னை உணவு வழங்குதுறை ஆணையர் அனுமதியின்றி வெளி மாவட்டங்களில் வாழும் அல்லது வணிகம் நடத்தும் எவருக்கும் வெல்லமோ அல்லது கண்டசாரி சர்க்கரையோ விற்கக்கூடாது' என்று, தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

இதுபற்றி அமைச்சர் மதியழகன் கூறியதாவது:—

"வெல்லம் வெளி இடங்களுக்குப் போய், அதன் விளைவாக விலை உயருவதைத் தடுக்கும் நோக்கத்துடன் இந்த ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இது ஓர் ஒழுங்குபடுத்தும் நடவடிக்கையே ஆகும். வெளி மாநிலங்களுக்கு வெல்லம் எடுத்துச் செல்வதற்கு விதிக்கப்படும் தடை அல்ல."

**பருப்பு வகைகள்**

இனி அரசு, பருப்பு வகைகள் வாங்குவதில்லை என்று முடிவு செய்திருக்கிறது. அவசியமானுல் உணவுக் கழகமும், கூட்டுறவு நிலையங்களும் வாங்கும். தனிப்பட்ட வணிகர்களுக்கு ஊக்கம் அளிக்கப்படும்.

## அமெரிக்க உணவுத் தானியம்

வாஷிங்டன், அக். 31—

1968-ம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் பி.எல். 480 ஏற்பாட்டின் கீழ் அமெரிக்காவிலிருந்து 35 இலட்சம் டன் உணவுத் தானியங்களை இந்தியா பெறுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

## தி. மு. கழக இடைத் தேர்தல்கள்--நகராட்சித் தேர்தல் நிதி

கழகத் தேர்தல் நிதியாகத் தலைமைக் கழகத்திற்குக் கிடைத்துள்ள தொகை விவரம் வருமாறு:—

| | ரூ. காசு |
|---|---|
| ஏற்கனவே வெளியிடப்பட்ட விவரப்படி | 45,040.00 |
| தஞ்சை மாவட்டச் சார்பில் செயலாளர் மன்னை ப. நாராயணசாமி அவர்கள் மூலம் | 1500.00 |
| தென்னுற்காடு மாவட்டக் கழகச் சார்பில் ஏற்கனவே விவரங்கள்படி அளிக்கப்பட்ட ரூ. 10,002-ன் தொடர்ச்சியாக விழுப்புரம் வட்டச் சார்பில் தோழர் எம். சண்முகம் எம்.எல்.ஏ. அவர்கள் பொருளாளரிடம் அளித்தது | 1160.00 |
| தெ. ஆ. மாவட்டம் கடலூர் நகரச் சார்பாக தோழர் இளம்வழுதி எம்.எல்.ஏ. அவர்கள் அளித்தது | 2020.00 |
| தென்னுற்காடு மாவட்டம் விருத்தாசலம் வட்டம் மங்களூர் ஏ. கிருஷ்ணன் எம்.எல்.ஏ., திட்டக்குடி ஏ. கிருஷ்ணசாமி, ஆர். ரங்கசாமி, இ. சொ. சிங்காரம், தி. து. சண்முகம், ஆர். கோவிந்தன், வண்ணுத்தூர் கிளைச் செயலாளர் பொன்னுசாமி, பெரியநெசலூர் இராமசாமி, தங்கவேலு, மலையனூர் பொன்னுசாமி, மங்களூர் தி. மு. க. கிளை கோவிந்தசாமி, இடச்செருவாய் ஆர். வேலாயுதம், அரியநாச்சி கணபதி, கொங்கராயர் சேப்பாக்கம் தியாகராச உடையார், தொண்டங்குறிச்சி சின்னசாமி உடையார், மற்றும் தொகுதி மக்கள் சார்பாகப் பொருளாளரிடம் சேர்ப்பிக்கப்பட்டது | 1021.00 |
| தெ. ஆ. மாவட்டம் கள்ளக்குறிச்சி வட்டம் நாகலூர் நடராசன் | 100.00 |
| செங்கற்பட்டு மாவட்டம் பொன்னேரி வட்டச் சார்பாக தோழர் பா. நாகலிங்கம் எம்.எல்.ஏ. அவர்கள் அளித்தது | 1000.00 |
| திருச்சி மாவட்டச் சார்பாக ஏற்கனவே அளிக்கப்பட்டுள்ள தொகை ரூ. 9,000-ன் தொடர்ச்சியாக செயலாளர் அன்பில் தருமலிங்கம் அவர்கள் பொருளாளரிடம் சேர்ப்பித்தது | 1000.00 |
| கோவை மாவட்டம் கூனம்பாடி தோழர் மு. அய்யாவு | 10.00 |
| பலகுரல் மன்னன் சிவகங்கை சேதுராசன் கலந்துகொண்ட நிகழ்ச்சிகளில் ஆங்காங்கு வசூலித்துக் கொடுத்த தொகை | 138.85 |
| ஆமதாபாத்—மணிநகர் அழகிரி மன்றச் சார்பில் நெல்லை திராவிடமணி அவர்கள் கலந்துகொண்ட பொதுக்கூட்டத்தில் உண்டியல் மூலம் வசூலித்து அனுப்பிய தொகை | 25.00 |
| அரியலூர் தி. மா. மு. க. சார்பில் தோழர் துரை கலியரத்தினம் | 10.00 |
| ஆக மொத்தம் | 53,024.85 |

—பொருளாளர் தி.மு.க.

## மாறனை ஆதரிப்பீர்!

### முஸ்லிம் பெருமக்களுக்கு காயிதே மில்லத் வேண்டுகோள்

"முஸ்லிம் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் கட்டுப்பாடுமிக்கவர்கள். இந்த இடைத் தேர்தலில் தி. மு. கழக வேட்பாளர் முரசொலி மாறனை ஆதரித்து முன்னைக் காட்டிலும் பெருவாரியாக வாக்களிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தாங்கள் சென்று வாக்களிப்பதோடு நில்லாமல், மற்ற சகோதரர்களையும் வாக்குச் சாவடிக்குச் சென்று கழக வேட்பாளரை ஆதரித்து வாக்களிக்கும்படி கோரவேண்டும். முஸ்லீம்கள்இதனைத் தங்கள் கடமையெனக் கொள்ள வேண்டும்."

(ஜாம் பஜார் சூரப்ப முதலித் தெருவில் நடைபெற்ற கூட்டத்தில்)

அமைச்சர்

## மா. முத்துச்சாமி சுற்றுப்பயணம்

நவ. 4: காலை 10 மணி: மார்த்தாண்டம்—பொதுமக்கள் வரவேற்பு; காலை 11-30 மணி; தாக்கலை—வழக்கறிஞர்கள் வரவேற்பு; பகல் 12-30 மணி: மகளிர் கல்லூரியைப் பார்வையிடல்; மாலை 4 மணி: மணவாளக்குறிச்சி; மாலை 6 மணி: கிறித்துவக் கல்லூரி பிளாட்டினம் விழா; இரவு 8 மணி: நாகர்கோயில் — பொதுமக்கள் வரவேற்பு; இரவு 10 மணி: கோட்டயம்—பொதுமக்கள் வரவேற்பு.

நவ. 5: சென்னை.

## இடைத் தேர்தல் பணிக்கு இரு பரிசுகள்!

### தலைமைக் கழகம் வழங்குகிறது

"தென் சென்னை இடைத் தேர்தலில், அதிக வாக்குகள் வித்தியாசம் காட்டுகின்ற தொகுதிகள், முதல் இரண்டாவது—மூன்ருவது என்ற வரிசைபடி பரிசுகளைப்பெறும்.

அறிஞர் அண்ணு அவர்களின் அழகோவியம் பொறித்த வெள்ளிக் கேடயங்களைத் தலைமைக் கழகத்தின் சார்பில் வழங்க இருக்கிருர்கள்.

"அதேபோல் அதிக வாக்குகள் வித்தியாசம் காட்டுகின்ற வட்டங்களுக்கும், முதல்—இரண்டாவது—மூன்ருவது — நான்காவது — ஐந்தாவது என்ற வரிசையில் ஐந்து பரிசுகள் வழங்கப்படும்.

"உங்கள் ஆற்றலைக் காட்டி—பம்பரமெனச் சுழன்று பணியாற்றி பரிசு பெறத் தயாராகுங்கள்."

என்று மாவட்டச் செயலாளர் நீலநாராயணன் கேட்டுக் கொள்கிருர்.

## மதுரை மாவட்டச் சீரணி

### 2500 பேர் பங்கேற்பர்

2500 தொண்டர்களைக் கொண்ட மதுரை மாவட்டச் சீரணி டிசம்பர் மாதத்தில் அமைக்கப்படும்.

மதுரை மாவட்ட முன்னேற்றக் குழுக் கூட்டத்தில் பேசிய சீரணியின் தனி அதிகாரி கே. பரமசாமி மதுரை மாவட்டத்தில் அதிகம் பேர் சேருவார்கள் என எதிர்பார்ப்பதாகக் கூறினுர்.